அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

டிசம்பர் - 2024 | மரம் - 3 | கன்று - 12 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-




ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை

# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் பாசத்திற்குரிய எனதன்பு ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த சிறார் இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கிறிஸ்தவத்தின் வேரானது கிறிஸ்துவின் மீதான தீராத அன்பில் தான் மையம் கொண்டிருக்கிறது. அதன் கிளைகள் உயிர்மநேயம் கொண்டும் மனிதநேயம் கொண்டும், படைப்புகளின் மீது மலர் சொரியவேண்டும். மனிதத்தின் மையத்தில் புயலாய் மையம் கொண்டு சமுதாயக் கறைகளைக் கருணையின்றிக் கடக்கும் எந்தவொரு போதனையும் அதன் அர்த்தத்தைத் தொலைத்துவிடுகிறது.

ஆனால் கிறிஸ்தவம், அது எப்போதுமே அன்பின் அடிச்சுவடுகளில் பாதம் பதித்து அயலானின் கண்ணீர் ஈரம் துடைப்பதற்கு கைக்குட்டையோடு காத்திருக்கும் தெய்வீக தரத்தின் தொகுப்பு. பல்லுக்குப் பல் என்னும் பழி வாங்கல் கற்பித்தல்களிலிருந்து விலகி வாழ்வியல் எதார்த்தங்களின் கரம் பிடித்து சமுதாயத்தின் அடித்தட்டு மக்களின் வியர்வையும், குருதியும் கலந்த வேதனைப் பிசுபிசுப்பை துடைத்தெறியத் துடித்தவர் தான் நம் நண்பரும் தகப்பனுமாகிய இயேசு. 'நீ வலக்கையால் செய்யும் தானம் இடக்கைக்குத் தெரியவேண்டாம்' என்று அன்பின் ஆழத்தை அகலப்படுத்துகிறார் இயேசு.

எதிரியை நேசி - என்னும் அறிவுரையால் அன்பை ஆழப்படுத்துகிறார், இன்னும் இதயம் தொடும் ஏராளம் அறிவுரைகளை அளித்து அன்பை நீளப்படுத்துகிறார். இயேசுவின் போதனைகளை கைக்கொண்டு இயேசுவைப்போலவே உருமாற என் அன்பின் வாழ்த்துக்கள்.

இயேசு யார் என்பதை அறியாத மக்களுக்கு அவரை எளிமையாக அழுத்தமாக அறியவைக்க வேண்டும் என்னும் எண்ணமே இந்தப் படைப்பு உருவாகக் காரணம்.

இவ்விதழ் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்குமென்றால் அயலகத்திலுள்ள உங்கள் நண்பர்களுக்கும், தாயகத்திலுள்ள உங்கள் உறவுகளுக்கும் இவ்விதழை அறிமுகப்படுத்த உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கிறிஸ்துமஸ் காலங்கள் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்க நான் ஜெபிக்கிறேன்.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# மருக்கொழுந்து

நீதிமான்களைப் போல் பாசாங்கு செய்து, மற்றவர்களை கவர்ச்சிக்க வேண்டும் என்ற விருப்பத்தால் இருக்கும் பரிசேயரைப் பார்த்து இயேசு இவ்வாறு சொன்னார்: ‘‘பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாம் மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசமபாகம் கொடுத்து, நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே’’ (லூக்கா 11:42).

வயல்களிலிருந்து அறுவடையாகும் பொருட்களில் தசமபாகத்தை அல்லது பத்தில் ஒரு பாகத்தை செலுத்த வேண்டும் என்று இஸ்ரவேலுக்கு தேவன் கொடுத்த சட்டமாகும். ஒற்தலாம், மருக்கொழுந்து என்பவைகள் உணவுக்கு நல்ல மணமான சுவையூட்டுவதற்கு பயன்படுத்தப்படும் சிறு செடிகள். இந்த அற்பமான பூண்டுகளில் பத்தில் ஒரு பாகத்தை பரிசேயர்கள் கவனமாகச் செலுத்துகின்றனர், ஆனால் அன்பு காண்பிப்பது, தயவாயிருப்பது, அடக்கமாயிருப்பது போன்ற அதிமுக்கியமான தேவைகளை புறக்கணிக்கிறதற்காக இயேசு அவர்களை கண்டிக்கிறார். நியாயத்தையும், தேவ அன்பையும் விட்டுவிடாதிருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

**மருக்கொழுந்து** ஒரு நறுமணமுள்ள மூலிகைத் தாவரமாகும். இதன் தாவரவியல் பெயர் Artemisia absinthium. மருக்கொழுந்து மருந்தாகவும் நறுமணப் பொருளாகவும் பயன்படுகிறது. ஆங்கிலத்தில் இதை Wormwood என்பர். மரிக்கொழுந்து, தவனம், தமனம், தமனகம், தவனகம் இதன் வேறு பெயர்களாகும். மருக்கொழுந்து = மரு(மணம்)+கொழுந்து மணம் நிறைந்த கொழுந்துகள் உடையது.

பெரும்பாலான மலர்களை முகர்ந்து பார்த்தால்தான் மணம் தெரியும். மருக்கொழுந்து இருக்கும் இடங்கள் எல்லாம், நறுமணத்தைப் பரப்பும். மருக்கொழுந்து செடியை இந்தியா உள்பட 48 நாடுகள் ஏற்றுமதி செய்கின்றன. அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கேக், புகையிலை மற்றும் பானங்களுக்கு நறுமணமூட்ட அதிக அளவில் உபயோகிக்கப்படுகிறது. இந்தியாவில் காஷ்மீர், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, மஹாராஷ்டிரா மற்றும் ஆந்திரா மாநிலங்களில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் சேலம், தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. மருக்கொழுந்து, வாசனை மலர் மாலைகளிலும், மலர்ப் பூங்கொத்துக்களிலும் சேர்க்கப்படுகிறது. வாசனை எண்ணை தயாரிப்பிலும், வாசனை மலர் மருத்துவத்திலும், அறை நறுமணமூட்டியாகவும், அதிகம் பயன்படுகிறது. அழகு சாதன பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்களின் தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது.



மருக்கொழுந்து ஓராண்டு பயிராக உள்ளது. மருக்கொழுந்து, அடர்த்தியாக, நிறைய கிளைகளுடன், சாம்பல் நிறம் கலந்த பச்சை வண்ண சிறிய இலைகளுடன் காம்பற்றதாக

இருக்கும். மெலிதான உருவில் தண்டுகளைக் கொண்டது. மலர்கள் வெளிர் மஞ்சள் நிறமாக இருக்கும். இதில் நெட்டை மற்றும் குட்டை என இரு வகைகள் உள்ளன. இதன் செடிகள் நேராகவும், அடர்த்தியாகவும் அதிக கிளைகளையும் கொண்டது. இலைகள் வெள்ளை கலந்த பச்சை நிறத்துடன் காணப்படும். மருக்கொழுந்து, வண்டல் நிலம், கரிசல் நிலம், மற்றும் செம்மண் நிலங்களில் அதிக அளவில் வளரும். அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி, உரம் மற்றும் மருந்து தெளிக்க வேண்டிய அவசியம் இல்லாமலேயே, நன்கு செழித்து வளரும் தன்மைமிக்கது. ஓராண்டு காலம் வரை இலைகள் மற்றும் தண்டுகள் மூலம், நறுமணப் பயன்கள் தரும்.



மனிதரின் பல்வேறு உடல் நல பாதிப்புகளுக்கு தீர்வாகும் தன்மைமிக்கது. உடலுக்கு கெடுதல் செய்யும் வியாதிக் கிருமிகளை அழிக்கும் மருக்கொழுந்து, சருமத்தில் ஏற்படும் பூஞ்சைத் தொற்றுகளுக்கு, மருந்தாகிறது. உடல் வீக்கங்கள் கட்டிகள் தரும் வலியைப் போக்கி, அவற்றை சுருங்க வைக்கிறது.



மன நல பாதிப்புகளுக்கு ஆற்றல்மிக்க, நிவாரணமாகத் திகழ்கிறது. சிலருக்கு மன உளைச்சல்கள் அல்லது உடல் நல பாதிப்புகள் காரணமாக, இரவில் உறக்கம் வராது. இத்தகைய பாதிப்புகள் நீங்கி, நல்ல தூக்கம் வர மருக்கொழுந்து உதவும். தினமும் உறங்கப் போகுமுன், தலையணையின் கீழே, ஒரு கொத்து, மருக்கொழுந்து இலைகளைத் தண்டுடன் வைத்துக்கொண்டு, அதன் பின் உறங்கச் செல்ல, அமைதியான உறக்கம், இயல்பாக வரும்.



மருக்கொழுந்து இலைகளை அரைத்து விழுதாக்கிக் கொண்டு, அதில் ஒரு தம்ளர் தண்ணீர் கலந்து சற்று நேரம் ஊற வைக்கவும். பின்னர், அந்த நீரைப் பருகி வர, வயிற்று வலி குணமாகும். உடல் தோலில் பூஞ்சைகள் தொற்றால், சரும கோளாறு உள்ளவர்கள், இந்த நீரை தினமும் பருகி வர, நச்சுத் தொற்றுகளினால் ஏற்பட்ட சரும பாதிப்புகள் விலகி விடும். மருக்கொழுந்து, உடல் சூட்டினால் உண்டாகும், வயிற்றுக் கடுப்பு மற்றும் நீர்க்கடுப்பு பாதிப்புகளை தணிக்கும் ஆற்றல்மிக்கது.

வாணலியில் நல்லெண்ணை விட்டு சற்று சூடு வந்ததும், விழுதாக அரைத்து வைத்திருக்கும், மருக்கொழுந்துடன் சிறிது சுக்குத்தூள் கலந்து நன்கு வதக்கவும். இந்தக் கலவையை இறக்கி, சற்று ஆறியதும், நெற்றியில் பற்று போல தடவி வர, தலைவலி விலகும்.

கை கால் மூட்டு வலிகளுக்கு, வலியுள்ள இடங்களில் இந்த மருக்கொழுந்து எண்ணை விழுதை தடவி வர, உடனடியாக, வலிகள் நீங்கும். வீக்கம் மற்றும் கட்டிகளுக்கும் நல்ல குணமளிக்கும், ஆற்றல் வாய்ந்தது. இதன் இதமான நறுமணம், மனதிற்கு அமைதியை

அளிக்கும். உடல் வலியால் உறக்கம் வராமல் தவித்தவர்கள், மருக்கொழுந்து மருந்தை உடலில் பாதிப்புள்ள இடங்களில் தடவி வர, இழந்த உறக்கத்தைத் திரும்பப் பெற்று வலியின்றி உறங்கலாம்.

வாணலியில் சிறிது தேங்காயெண்ணையை ஊற்றி, அதன் பின்னர் விழுதாக அரைத்த மருக்கொழுந்தை அதில் சேர்த்து, எண்ணை காய்ந்து, தைலம் போல வரும்வரை காய்ச்சி, பின்னர் ஆற வைக்கவும். இதை சொரியாசிஸ் போன்ற கடுமையான தோல் வியாதிகள் உள்ள இடங்களில் தடவி வர, வியாதிகள் விலகி விடும். மேலும், அரிப்பு மற்றும் வலியைத் தரும் வீக்கங்களின், பாதிப்பை சரியாக்கி, அவற்றை குணமாக்கி, வலிகளையும் போக்கும் வல்லமைமிக்கது மருக்கொழுந்து.

மருக்கொழுந்தை கஷாயம் போலக் காய்ச்சி, பருகி வர, உடலில் சேர்ந்த நச்சுக்களை முறிக்கும் சக்தி வாய்ந்தது. புற்று வியாதிகளை அணுக விடாமல், உடலைக் காக்கும் ஆற்றல்மிக்கது.

கருமையான தலைமுடிக்கு சிலருக்கு, வியாதிகளுக்கு உட்கொள்ளும் மருந்துகளினால் அல்லது முறையான பராமரிப்பு இல்லாத காரணங்களால், தலைமுடி செம்பட்டையாக மாறிவிடும். இதனால் இள வயதிலேயே, வயது முதிர்ந்தது போலத் தோற்றம் உண்டாகி, மன உளைச்சல் அடைவார்கள். இவர்கள், மருக்கொழுந்து இலைகளை, நிலாவாரை இலைகளுடன் கலந்து நன்கு மைபோல அரைத்து, அதைத் தலையில் மயிர்க்கால்கள் வரை நன்கு மசாஜ் செய்வதுபோல தடவி, ஊற வைத்து, சற்று நேரம், கழித்து குளித்து வர, தலைமுடி செம்பட்டை வண்ணம் நீங்கி, விரைவில் கறுப்பு வண்ணம் தோன்ற ஆரம்பிக்கும்.

இங்கு கூறப்பட்டுள்ள மூலிகைகள் மற்றும் பதார்த்தங்களின் அடிப்படையில் சுயசிகிச்சை மேற்கொள்ள விரும்பினால் சித்த மருத்துவரின் தகுந்த ஆலோசனையுடன் மேற்கொள்வது நல்லது.

**தேவன் நல்லது என்று கண்டார். ஆம், தேவன் படைத்ததெல்லாம் நன்றாகவே இருக்கிறது. நன்மைகளின் நாயகனுக்கு நன்றி.**

---

**நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன்; தேவனுடைய கிருபையை என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன்.**

சங்கீதம் 52:8



# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..



மண்ணுலகம் உருவமில்லாமல், விளக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நிலையில் இருந்தது. எங்கும் இருளும் தண்ணீரும் மட்டுமே நிறைந்திருந்தன. தேவ ஆவியானவர் மட்டும் தண்ணீரின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். வெளிச்சம் இன்னும் மண்ணுலகுக்கு அறிமுகமாகியிருக்கவில்லை.

ஒரு நல்ல உலகைப் படைக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்தார். அவருடைய கற்பனைகளில் ஒரு உலகம் விரிந்தது. அந்த உலகை நிஜத்தில் கொண்டு வரவேண்டும் என்று தேவன் நினைத்தார். அதற்கு முதல் தேவை வெளிச்சம். இருளுக்குள் கிடக்கும் உலகைத் தூசு தட்ட முதல் தேவை வெளிச்சம்.

வெளிச்சம் உண்டாகக்கடவது!

இதுதான் படைப்பின் துவக்கத்தில் தேவன் உச்சரித்த முதல் வார்த்தை. அதுவரை இருளுடன் மட்டுமே அறிமுகம் கொண்டிருந்த உலகத்தின் மீது முதன் முதலாக ஒரு வெளிச்சக் கீற்று வானிலிருந்து வந்து விழுந்தது. அந்த வெளிச்சம் மெல்ல மெல்ல பூமியின் மேலிருந்த இருளை வெளியேற்றியது.



தேவன் வெளிச்சத்தைப் பார்த்தார். உருவமற்ற பூமி முதன் முறையாக தன் அழகற்ற முகத்தை வெளிச்சத்தில் காட்டியது. முதல் படைப்பான ஒளி தேவனுக்கு மிகவும் திருப்திகரமாக அமைந்தது. ஆனாலும் எப்போதுமே வெளிச்சமாய் இருப்பது நல்லதல்ல, வெளிச்சமும் இருளும் மாறிமாறி வரவேண்டும் அப்போது தான் நன்றாக இருக்கும் என்று தேவன் நினைத்தார்.

அதன்படியே கொஞ்சநேரம் வெளிச்சம், கொஞ்ச நேரம் இருள் என ஒரு நாளை இரண்டாகப் பிரித்தார். இப்போது தேவனுக்கு முழு திருப்தி! வெளிச்சமாய் இருக்கும் காலத்தைப் பகல் என்றும் இருளாய் இருக்கும் காலத்தை இரவு என்றும் தேவன் பெயரிட்டார். அது தான் உலகில் நடந்த முதல் பெயர்சூட்டு விழா. அந்த நிகழ்ச்சி முடிந்தபோது முதல் நாள் முடிவடைந்தது.

மறுநாள் தேவன் வெளிச்சத்தில் இருந்த பூமியைப் பார்த்தார். தண்ணீரும், தரையும் பின்னிப் பிணைந்து ஒரு அழகற்ற, பயனற்ற நிலையில் இருந்தது பூமி. இந்தத் தண்ணீரை இரண்டாகப் பிரித்து வானத்துக்கு மேலே ஒரு பாகத்தையும் பூமியிலே இன்னொரு பாகத்தையும் வைத்தால் நன்றாக இருக்குமே என்று தேவன் நினைத்தார். ஆகாயவிரிவை உண்டு பண்ணினார். ஆகாய விரிவுக்கு வானம் என்று பெயரிட்டார்.



பூமியிலிருந்த தண்ணீரின் ஒரு பகுதி வானத்துக்கு மேலே இடம்பெயர்ந்தது. மிச்ச தண்ணீர் தாய்வீடான பூமியிலேயே தங்கிவிட்டது. படைத்தலின் இரண்டாம் நாள் பணி அத்துடன் முடிவடைந்தது.

தண்ணீரும் தரையும் ஆங்காங்கே சிதறி சிதறிக் கிடப்பதை விட தண்ணீர் ஓரிடத்திலும், தரை ஓரிடத்திலும் இருந்தால் நன்றாக இருக்குமே என்று தேவன் எண்ணினார். 'பூமியிலே ஆங்காங்கே கிடக்கும் தண்ணீர் எல்லாம் ஒரே இடத்தில் வந்து சேரட்டும்' என்று

கட்டளையிட்டார். பூமியில் கிடந்த தண்ணீரெல்லாம் உடனே ஓடி ஓரிடத்தில் வந்து சேர்ந்தது. மிகப்பெரிய தண்ணீர்ப் பரப்பு ஒன்று உருவானது. தண்ணீரெல்லாம் கைகோர்த்து நின்ற மிகப்பெரிய நீர்நிலைக்கு தேவன் சமுத்திரம் என்று பெயரிட்டார். இப்போது தண்ணீர் வடிந்து போன வெட்டாந்தரைக்கு தேவன் பூமி என்று பெயரிட்டார். வெட்டாந்தரை மிகப்பெரிய அளவில் அவருடைய முன்னால் கிடந்தது. தேவன் மகிழ்ந்தார். ஆனால் தரை அழகில்லாமல் வெறுமையாக இருந்தது. அழகில்லாமல் இருக்கும் தரையை எப்படி அழகாக்குவது என்று தேவன் யோசித்தார். நிலத்தில் ஏராளமான புல்வெளிகளையும், செடிகளையும், மரங்களையும் தேவன் வளரச் செய்தார். வெறுமையாய்க் கிடந்த தரையில் திடீரென விதவிதமான செடிகளும், மரங்களும், அழகிய புல்வெளிகளும் தோன்றின. இப்போது தரை வெறுமையாக இல்லாமல் அழகானதாக மாறியது. பூமி தன் பரப்பு முழுவதும் பச்சை போர்த்திச் சிரித்த போது காலையும் மாலையும் சேர்ந்து மூன்றாம் நாள் முடிவுற்றிருந்தது.



உலகத்துக்குப் பகலையும் இருளையும் கொண்டு வந்த தேவன், இரண்டையும் ஆட்சி செய்ய இரண்டு சுடர்கள் இருந்தால் நன்றாக இருக்கும் என்று கணித்தார். சுடர்கள் மாறி மாறி வருவதை வைத்துக் காலங்களைக் கணிக்கவும் முடியும் என்று தேவன் உணர்ந்தார். எனவே பகலை ஆள ஒரு மிகப்பெரிய சுடரையும், இரவை ஆள ஒரு சிறிய சுடரையும் தேவன் நான்காவது நாளில் படைத்தார். அந்த இரண்டு சுடர்களையும் வானத்திலிருந்து ஆட்சி செய்யுமாறு கட்டளையிட்டார். வானம் சுடரைச் சுமந்ததும் அழகானதாக மாறியது. இப்போது பூமியில் வெளிச்சம் தேவையான அளவுக்குக் கிடைத்தது. வானத்தின் பரப்பில் சுடர்களுடன் ஏராளமான நட்சத்திரங்களையும் தேவன் படைத்தார். இப்போது வானம் வெளிச்ச மயமாக எழிலின் இருப்பிடமாக மாறியது. நான்காவது நாள் படைப்பில் தேவன் மிகவும் திருப்தியடைந்தார்.



தன்னுடைய நான்கு நாள் படைப்பையும் ஐந்தாவது நாளில் பார்வையிட்டார் தேவன். அழகிய பூமி, நீள் கடல், வெளிச்ச வானம் என எல்லாம் மிக அழகாக இருந்தன. தண்ணீரிலும் தரையிலும் இனிமேல் உயிரினங்கள் தோன்றினால் அது பூமியை மேலும் அழகுபடுத்தும் என்று தேவன் ஏராளமான கடல்வாழ் உயிரினங்களையும், வானத்துப் பறவைகளையும் படைத்தார். கடல் முழுவதும் மீன்களும் கடல்வாழ் உயிரினங்களும் நீந்தத் துவங்கின, அவை தண்ணீரின் மேல் குதித்தும், நீர்த்தாவரங்களின் இடையே ஓடியும் விளையாடியதைக் கண்ட தேவன் ஆனந்தமடைந்தார். வானத்துப் பறவைகள் அழகழகான சிறகுகளை அடித்து மரங்களிடையே ஆனந்தமாய் சுற்றித் திரிவதைக் கண்டு தேவன் மிகவும் திருப்தியடைந்தார். நீங்கள் எல்லாம் பலுகிப் பெருகி இந்த பூமியின் மௌனத்தைக் கலையுங்கள் என்று அவற்றை வாழ்த்தினார். ஐந்தாவது நாள் படைப்பை அத்துடன் தேவன் முடித்துக் கொண்டார்.



ஆறாவது நாளில் தேவன், நிலத்தில் ஊர்வன, காட்டு விலங்குகள், கால்நடைகள் எல்லாம் வேறு வேறு இனங்களில் தோன்றட்டும் என ஆணையிட்டார். பறவைகள் வானத்தில் பறந்து திரிய, விலங்குகள் பூமியில் அலைந்து திரிந்தன. அவை வெவ்வேறு இனங்களில், வெவ்வேறு வடிவங்களில் பூமியை நிறைத்தன. தேவன் தான் படைத்த விலங்குகளோடு பேசினார். நீங்களும் பலுகிப் பெருகி பூமியை நிறையுங்கள் என்று வாழ்த்தினார்.

தன்னுடைய ஆறு நாள் படைப்பையும் தேவன் பார்த்து ரசித்தார். ஆனாலும் ஒரு குறை அவர் கண்களுக்குத் தெரிந்தது. பூமியில் பறவைகள், விலங்குகள், அழகிய தாவரங்கள் எல்லாம் இருக்கின்றன, கடலில் நீர்வாழ் உயிரினங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இவற்றையெல்லாம் பூமியிலிருந்து ஆட்சி செய்ய ஒரு உயிரினத்தைப் படைத்தால் நன்றாக இருக்குமே என்று தேவன் யோசித்தார்.

விலங்குகளில் ஒன்றையோ, பறவைகளில் ஒன்றையோ, நீர்வாழ் உயிரினங்களில் ஒன்றையோ பூமியை ஆள்வதற்காகத் தேர்ந்தெடுத்தால் சிறப்பானதாக இருக்காது என்று அவருக்குத் தோன்றியது. எனவே 'என்னைப் போன்ற வடிவில் ஒரு உயிரினத்தைப் படைப்பேன். அவனை மனிதன் என்று அழைப்பேன், அவனிடம் இந்தப் பூமியை ஆளும் பொறுப்பை ஒப்படைப்பேன்' என்று தேவன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டார். இதுவரை படைத்த அனைத்தையும் கட்டளையிட்டு உருவாக்கிய தேவன் மனிதனை மட்டும் வித்தியாசமாகச் சிறப்பாகப் படைக்க வேண்டும் என்று விரும்பினார். 'மனிதன் தோன்றட்டும்' என்னும் ஒற்றைவாக்கில் மனிதனைப் படைத்தால், அவனுக்கும் இதுவரை தான் படைத்த உயிரினங்களுக்கும் இடையே வேறுபாடு இல்லாமல் போய்விடும் என்று எண்ணிய தேவன், மனிதனை தன்னுடைய உழைப்பினாலும், உயிரினாலும் உருவாக்கவேண்டும் என்று தீர்மானித்தார்.

தரையில் அமர்ந்து கொஞ்சம் மண்ணைச் சேகரித்தார். அந்த மண்ணை வைத்துக் தேவன் தன்னைப் போன்ற ஒரு உருவத்தை உருவாக்கினார். உலகில் உருவாக்கப்பட்ட முதல் சிற்பம் அது தான். தேவன் மனிதனின் உருவத்தைச் செய்து முடித்ததும் குனிந்து அவனுடைய நாசிகளில் தன்னுடைய உயிர் மூச்சை ஊதினார்.

மனிதன் உயிர்பெற்றான் தேவனின் உயிர்மூச்சால் உயிர்பெற்றதால் அவனுக்குள் தெய்வத் தன்மை நிறைந்திருந்தது. தன்னுடைய கண்ணைத் திறந்து அவன் தேவனைப் பார்த்தான். தேவன் புன்னகைத்தார். தன்னுடைய உடல் உழைப்பும், உயிர் மூச்சும் உருவாக்கிய மனிதனை அவர் நேசத்துடன் அணைத்துக் கொண்டார்.



மனிதனைப் படைத்த தேவன் பூமியைப் பார்த்தார். எந்த இடமும் மனிதனைத் தங்கவைக்கத் தகுதியானதாய்த் தோன்றவில்லை. எனவே தேவன் ஒரு தோட்டத்தை அமைத்தார். அதுதான் தேவனின் ஏதேன் தோட்டம். ஏதேன் வானக சுவர்க்கத்தின் மண்ணக வடிவமாய் இருந்தது.

அழகிய மரங்கள் தோட்டம் முழுவதும் நிறைந்திருந்தன. மரங்கள் மனிதனின் பசியைப் போக்க சுவையான பழங்களை கிளைகளெங்கும் தொங்கவிட்டிருந்தன. அழகிய பறவைகள் மரங்களில் அமர்ந்து சிறகடித்தும், குரலெழுப்பியும் ஏதேனை இசையின் இருப்பிடமாக மாற்றின. மலர்களை தங்கள் முதுகில் ஏந்தியபடி ஓடும் பைசோன், கீகோன், இதெக்கேல், ஐபிராத்து என்னும் நான்கு அற்புத ஜீவ நதிகள் ஏதேனுக்குள் ஓடின.

அந்தத் தோட்டத்தின் நடுவே இரண்டு முக்கியமான மரங்கள் இருந்தன. ஒன்று ஜீவ விருட்சம், இன்னொன்று 'நன்மை தீமை அறியும் மரம்'. ஏதேன் தோட்டம் தேவனின் கற்பனைகளை நிஜத்தில் எடுத்து வைத்தது. ஏதேன் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்த தேவன், இதுதான் மனிதனுக்குத் தகுதியான இடம் என்று சொல்லி தான் படைத்த மனிதனை அங்கே தங்கச் செய்தார்.

ஆறு நாட்களாகத் தான் படைத்த பூமியையும், உயிரினங்களையும் தேவன் பார்வையிட்டார். அனைத்துமே மிகவும் திருப்திகரமாக இருந்தன. ஆறு நாட்களுக்கு முன் உருவமற்றிருந்த பூமி இப்போது அழகும், இன்னிசையும் நிறைந்த அழகிய இடமாக மாறியிருந்தது. தன்னுடைய படைப்பில் மகிழ்ந்த தேவன் ஏழாவது நாளில் ஓய்வெடுத்தார்.

பின் தேவன் ஏதேன் தோட்டத்திற்குச் சென்று மனிதனைப் பார்த்தார். அவன் நதிகளில் குதித்து, மரங்களில் கனிகளைப் பறித்துத் தின்று ஆனந்தமாக இருந்தான். தேவன் அவனை ஏதேன் தோட்டத்தின் நடுவே இருந்த மரத்தின் அருகே கூட்டிச் சென்று 'இதோ.. இந்தத் தோட்டத்திலும்,

இந்த உலகத்திலும் உள்ள எல்லாமே உனக்குச் சொந்தமானவை தான். ஆனால் இந்த ஒரு மரத்தின் கனியை மட்டும் நீ உண்ணக் கூடாது. இதன் பெயர் நன்மை தீமை அறியும் மரம்' என்று தேவன் மனிதனுக்கு தன்னுடைய முதல் கட்டளையைக் கொடுத்தார். அதுதான் தேவனிடமிருந்து மனிதன் பெற்றுக் கொண்ட முதல் கட்டளை. மனிதன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். தேவன் அவனையும் அழைத்துக் கொண்டு ஏதேனை விட்டு வெளியே வந்தார்.

'இதோ இந்த பூமி முழுவதும் உனக்கே சொந்தம். உனக்கு விருப்பமானதைச் செய்து மகிழ்ச்சியாக இரு. இந்த விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் அனைத்தையும் நான் உனக்காகத் தான் உருவாக்கியிருக்கிறேன். நீ எனக்கு மட்டும் பணிந்திரு, மற்றவை அனைத்தையும் ஆட்சி செய். இப்போது நான் படைத்த இந்த உயிரினங்களுக்கு நீ பெயரிடவேண்டும்'என்று தேவன் சொன்னார்.

தேவன் ஒவ்வொரு விலங்கினருகிலும் மனிதனை அழைத்துச் சென்றார். அவன் தன்னுடைய மனதில் தோன்றிய ஒரு பெயரைச் சொல்ல அதுவே அந்த இனத்தின் பெயரானது. அவ்வாறே அவன் பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் அனைத்திற்கும் பெயரிட்டான். மனிதனின் முதல் பணி அத்துடன் முடிவடைந்தது.

மனிதன் அனைத்திற்கும் பெயரிட்டு முடித்தபின் ஏதேன் தோட்டத்திற்குத் திரும்பினான். தேவன் பார்த்தார். எல்லா உயிரினங்களும் ஜோடி ஜோடியாக அலைய மனிதன் மட்டும் தனியாக இருக்கிறானே என்று நினைத்து வருந்தினார். அவர் எல்லா காட்டு விலங்குகளையும் கவனித்துப் பார்த்தார், எல்லா பறவையினங்களையும் பார்வையிட்டார் ஆனால் எதுவுமே மனிதனுக்குத் தக்க துணையாகத் தோன்றவில்லை. மனிதனைப் போன்ற தோற்றத்தில், மனிதனோடு நல்ல அன்புடன் உறவாடக்கூடிய ஒரு உயிரைத் தான் மனிதனுக்குத் துணையாக்க வேண்டும் என்று தேவன் தீர்மானித்தார்.

அன்று இரவில் மனிதன் தூங்கிக் கொண்டிருக்கையில் அவனருகில் தேவன் வந்து நின்றார். மண்ணினால் இன்னொரு உருவத்தைச் செய்தால் அது இன்னொரு இனமாகி விடும். எனவே மனிதனிலிருந்தே ஒரு உயிரைப் படைக்கவேண்டும். அப்போது தான் அது மனிதனின் உயிரின் பாகமாகவும், உடலின் பாகமாகவும் இருக்கும் என்று தேவன் நினைத்தார்.

அவனுடைய உடம்பில் எந்த பகுதியிலிருந்து மனிதனை உருவாக்குவது என்று தேவன் யோசித்தார். காலிலிருந்து இன்னொரு உயிரைப் படைத்தால் அவள் மனிதனை விடக் கீழானவளாகக் கருதப்படலாம், தலையிலிருந்து படைத்தால் மனிதனை அடக்கி ஆள முயலலாம், எனவே விலா எலும்பிலிருந்து ஒரு உயிரைப் படைக்க வேண்டும் என்று தேவன் திட்டமிட்டார்.

அப்போது தான் மனிதனும், மனிதனின் துணையும் ஒரே நிலையில் இருப்பார்கள். அவர்கள் இருவருமே சமமானவர்களாகக் கருதப்படுவார்கள். யாரும் யாரையும் விட உயர்ந்தவர் என்றோ, தாழ்ந்தவர் என்றோ எண்ணிக் கொள்ள மாட்டார்கள் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டார். தூங்கிக் கொண்டிருந்த மனிதனுக்கு தேவன் ஆழ்ந்த தூக்கத்தைக் கட்டளையிட்டார். அவன் மயக்க நிலையில் விழுந்தான். அப்போது தேவன் அவனுடைய விலா எலும்பிலிருந்து ஒன்றை எடுத்து அதை மனிதனின் துணையாக உருவாக்கினார்.

மனிதன் விழித்தெழுந்ததும் தேவன் அவனிடம், 'இதோ... இந்த உயிரை நான் உன் துணைவியாகத் தருகிறேன். உன்னுடைய விலா எலும்பிலிருந்து இவளை நான் உருவாக்கி இருக்கிறேன். எனவே இவளும் நீயும் ஒரே உடலாகவும், ஒரே உயிராகவும் வாழுங்கள்' என்றார். மனிதன் மகிழ்ந்தான்.

'இவள் என் எலும்பின் எலும்பும், சதையின் சதையும் ஆனவள். எனவே இவளுக்கு நான் மனுஷி என்று பெயரிடுகிறேன் என்றான்'. மனிதன் துணையுடன் வாழத்துவங்கினான். இருவருமே நிர்வாணத்தை அணிந்திருந்தார்கள், ஆனாலும் வெட்கத்தை அறிந்திருக்கவில்லை. மனிதனின் ஆனந்தத்தைக் கண்ட தேவன் தன்னுடைய படைப்பு முழுமையடைந்து விட்டதை அறிந்து மகிழ்ந்தார்.

தொடரும்...




# தேவனும் படைப்புகளும்

**ஆதியாகமம் 1:1-2 வரை படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**


1. தேவ ஆவியானவர் எதின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்?
2. ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது எது?
3. தேவன் முதல் நாளில் எதை படைத்தார்?
4. தேவன் ஆகாய விரிவுக்கு என்ன பெயர் வைத்தார்?
5. தேவன் மனிதனை எந்த நாளில் படைத்தார்.
6. பறவைகள் மற்றும் விலங்குகள் அனைத்திற்கும் பெயர் வைத்தவர் யார்?
7. காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்க உண்டாக்கப்பட்டது?
8. தேவன் உருவாக்கின தோட்டத்தின் பெயர் என்ன?
9. முதல் மனிதனை எதினால் உருவாக்கினார்?
10. முதல் மனுஷியை தேவன் எதினால் உருவாக்கினார்?

விடைகள் 17ஆம் பக்கம் பார்க்கவும்


# இதுதான்டா சர்ஜிக்கல் ஸ்டிரைக்
## (துல்லிய தாக்குதல்)





விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10:17)




கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;
இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. (எபேசியர் 2:8)




உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:17)




சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 1:18)

# புலி வருது புலி வருது!

‘‘ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்’’ (ஏசாயா 11:6). ஏசாயா தீர்க்கதரிசியின் கடைசி காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனத்தில் புலியைக் குறித்து காண்கிறோம். இந்த மாதம் வலிமையுள்ள புலியைக் குறித்து பார்க்கலாம்.

**புலி** (Tiger) என்பது பூனைக் குடும்பத்தில் உள்ள ஒரு இனமாகும். இதன் அறிவியல் பெயர் Panthera tigris. பூனை குடும்பத்திலேயே உருவத்தில் மிகப்பெரிய விலங்கான இது, அடர்ந்த வனப்பகுதியில் அமைதியாக வாழும் சுபாவம் கொண்டவை புலிகள். காட்டில் புலி நடந்து சென்றால் அதன் கம்பீரம் தனி அழகுதான். ஒவ்வொரு மனிதனுக்கும் கைரேகை மாறுபடுவது போல் ஒவ்வொரு புலிகளுக்கும் உடலில் உள்ள வரிகள் மாறுபடுவது இயற்கையின் அதிசயம். செம்மஞ்சள் நிற மேற்தோலுடன் கருப்புக் நிற கோடுகளுடன் வெளிறிய அடிப்பகுதியையும் கொண்டு காணப்படும். புலி பெரும்பாலும் மான்கள் போன்ற தாவர உண்ணிகளை வேட்டையாடுகின்றன. இது தனக்கென எல்லை வகுத்துக் கொண்டு வாழும் சமூக விலங்காகும். இது இரை தேடவும் தன் குட்டிகளை வளர்க்கவும் ஏதுவாக இருக்கும் வகையில் பெரும் பரப்பளவு நிறைந்த இடங்களில் வாழ்கின்றது. புலிக்குட்டிகள் தங்கள் தாயின் பராமரிப்பில் ஏறக்குறைய இரண்டு வயதுவரை வாழ்கின்றன. பிறகு அவைகள் தங்கள் வாழிடத்தை விட்டுப் பிரிந்து தங்களுக்கென எல்லையை வகுத்துக் கொண்டு தனியாக வாழப் பழகுகின்றன.

புலியானது இந்தியா, வங்கதேசம், மலேசியா மற்றும் தென் கொரியாவின் தேசிய விலங்காக உள்ளது. உலகளவில் இந்தியாவில் அதிகளவிலான புலிகள் இருந்து வருகின்றன. புலிகள் இந்தியாவில் 16 முதல் 17 மாநிலங்களில் வசித்து வருகின்றன. உலகம் முழுவதிலும் புலிகள் இந்தியா, ரஷ்யா, பூட்டான் உள்ளிட்ட 13 நாடுகளில் மட்டுமே உள்ளது. உலகம் முழுவதிலும் இருக்கக்கூடிய புலிகளில் 80 சதவீதம் இந்தியாவில் மட்டுமே உள்ளன. இது பெருமைப்படக்கூடிய விஷயம்.



புலிகளின் எண்ணிக்கையில் தமிழகம் 5-வது இடத்தில் உள்ளது. இந்தியாவில் புலிகள் காப்பகம் வனத்துறையினால் அமைக்கப்பட்டு புலிகள் அனைத்தும் காக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் 54 புலிகள் காப்பகங்கள் உள்ளது. தமிழகத்தில் 5 புலிகள் காப்பகம் அமைந்துள்ளது. அதில் சத்தியமங்கலம், முதுமலை, களக்காடு முண்டந்துறை,

ஆணைமலை, ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் என உள்ளது. புலிகளின் ஆயுட்காலம் என்பது காடுகளில் வாழும் புலிகள் சுமார் 12 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை உயிர் வாழும். மிருகக்காட்சி பூங்காவில் வளரும் புலிகள் தற்போது 20 ஆண்டுகளாக உயிர் வாழ்ந்து வருகிறது.

புலிகளில் மொத்தம் 6 வகைகள் உண்டு. இந்தியாவில் நம்மிடத்தில் இருக்கக்கூடிய புலிகள் ராயல் பெங்கால் டைகர் என அழைப்பார்கள். அதாவது வங்கப்புலி என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக மேற்கு வங்காளத்தின் சுந்தரவனக்காடுகளில் வசித்து வரும் வங்கப்புலிகள் என்று அழைப்பார்கள். அதேபோல் வங்காளப் புலி, சைபீரியப் புலி, சுமாத்திராப் புலி, இந்தோ-சீனப் புலி, தென் சீனப் புலி, மலேசியப் புலி என 6 வகைகள் உள்ளது. அரசாங்கமானது சுமார் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை புலிகளை கணக்கெடுக்கும். அதன்படி 2018-ம் ஆண்டுக்கு பிறகு 2022-ம் ஆண்டு புலிகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்தியாவில் 2022-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி சுமார் 3682 புலிகள் வசித்து வருகின்றன.

பொதுவாக ஒரு புலிகள் 3 முதல் 5 குட்டிகள் வரை போடும். அதில் பாதி குட்டிகள் தான் உயிருடன் வாழும். மீதி குட்டிகள் இறக்கும் சூழ்நிலைக்கு சென்று விடுகின்றன. புலிகளானது இரண்டு வருடங்கள் மட்டுமே தனது குட்டிகளை வைத்துக்கொள்ளும். 2 ஆண்டுகளுக்கு பிறகு குட்டிகளை அதன் தாயை பிரிந்து செல்லும். புலிகள் எவ்வாறு இரையை தேடி கொள்கிறது என்றால் பதுங்கி தாக்கும் குணாதிசயம் தான் அதன் சிறப்பு.

அடுத்ததாக புலிகளின் எல்லையை ஏற்படுத்த மரத்தில் நகங்களை வைத்து கீறி வெளிப்படுத்தும் அல்லது சிறுநீர் மூலம் அதன் எல்லையை மற்ற புலிகளுக்கு தெரியப்படுத்தும். அவ்வாறு அதனையும் மீறி ஒரு புலி உள்ளே வருகிறது என்றால் இரண்டு புலிகளுக்கும் எல்லை சண்டையானது நடக்கும். அதில் யார் வெற்றி பெறுகிறோர்களோ அது அந்த இடத்தில் இருக்கும். இதுதான் புலிகளின் குணாதிசயம். புலிகளுக்கு கண்பார்வை மிகவும் துல்லியமானது. ஆனால் நுகர்திறன் யானைகள் மற்ற மிருகங்களை விட சற்று குறைவு தான்.

புலிகளை பொறுத்தவரை பசித்தால் மட்டும் வேட்டையாடும் சுபாவம் கொண்டவை. புள்ளி மான், காட்டெருமை, காட்டுப்பன்றி உள்ளிட்டவைகள் புலிகளுக்கு மிகவும் பிடித்தமான உணவுகளாகும். பொதுவாக வனப்பகுதிக்குள் வசிக்கும் புலிகள் ஒவ்வொன்றும் தனக்குத்தானே எல்லைகள் அமைத்து வாழும் பழக்கம் கொண்டவை.

உணவு சங்கிலியில் முக்கிய பங்கு வகிக்கும் புலிகளின் எச்சங்கள் தான் பூஞ்சை காளான்களை உருவாக்கி பல்லுயிர் பெருக்கத்திற்கு வழி வகுக்கின்றன. புலிகள் வேட்டையாடப்படுவதால் மிகவும் அழிந்து விலங்குப் பட்டியலில் உள்ளது. புலிகளை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும் என்றால் இப்போது புலிகளே இல்லை என்றால், மான்கள் பெருகி விடும். அப்போது தாவரங்கள் அனைத்தையும் சாப்பிட்டுவிடும். பின்பு மரங்கள் எதுவும் வளராது. பின்னர் காடுகளே இருக்காது. எனவே புலிகளை வளர்ப்பதன் மூலம் மிகப்பெரிய காடுகளை நம்மால் உருவாக்க முடியும். மரங்கள் வளர்ந்தால் தான் மழை பெய்யும், ஆறுகள் உருவாகும். இதனால் தான் புலிகளை பாதுகாக்க ஜூலை 29ஆம் தேதி உலக புலிகள் தினம் கொண்டாடப்படுகிறது. எனவே சர்வதேச புலிகள் தினத்தில், நம் தேசிய விலங்கான புலியை வனத்துறையுடன் இணைந்து எடுக்கப்படும் முன்னெடுப்புகள் வெற்றி பெற ஜெபிப்போம்.

**தேவன் நல்லது என்று கண்டார். ஆம், தேவன் படைத்ததெல்லாம் நன்றாகவே இருக்கிறது. நன்மைகளின் நாயகனுக்கு நன்றி.**

தன் குட்டியிடம் செல்வதற்கு **புலிக்கு**
சரியான வழிகாட்டுங்கள் குழந்தைகளே.



# ஆகு!

இந்த வார்த்தையே நமது மன வெளிகளில் புன்னகை விதைகளைத் தூவும் வல்லமை படைத்தது. எத்தனை பெரிய சோகத்தின் அலைகள் நமது பாலை வெளிகளில் புரண்டு படுத்தாலும், ஒரு சின்னக் குழந்தையின் புன்னகைக் கைக்குட்டை கிடைத்தால் அந்த சோகம் புதையுண்டு போய்விடும். மழலைகளோடு விளையாடுகையில் மலைபோன்ற மன பாரங்கள் கூட பழுத்த இலை போல உதிர்த்து பறந்து மறையும்.

இயேசு குழந்தைகளை இறைமாட்சியின் அடையாளங்களாகப் பார்த்தார். குழந்தைகளை விண்வாழ்வுக்கான போதனையின் மையமாகப் பார்த்தார். குழந்தைகளை ஏற்பது, இறைமாட்சியின் அடையாளம். ''சிறுபிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்கிறான்'' (மாற்கு 9:37).

''நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத்தேயு 18:3) என்றார் இயேசு. குழந்தைகளைப் பற்றி அறிய வேண்டுமெனில் குழந்தைகளைப் போல மாறவேண்டும் என்கிறது உளவியல். குழந்தைகளோடு விளையாடும்போது அவர்களோடு தரையில் தவழ்ந்து விளையாடவேண்டும் என்கிறது மருத்துவம். குழந்தைகளோடு பழகும் போது அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளலாம் எனும் சிந்தனையோடு பழக வேண்டும் என்கிறது தத்துவயியல். குழந்தைகளைப் போல மாறினால் மட்டுமே விண்ணகம் என்கிறது ஆன்மிகம்.



சிறு பிள்ளைகள் எதற்கும் தந்தையின் அனுமதியை எதிர்பார்க்கும். தன் தேவைகளைத் தந்தையிடம் கேட்கும். தனது விருப்பங்களை அன்னையிடம் முன்வைக்கும். தனக்கு எது தேவையென்றாலும் அதை பெற்றோர் நிறைவேற்ற வேண்டும் என வந்து நிற்கும். தனது இயலாமையை முழுமையாய் ஏற்றுக் கொண்டு தனது பெற்றோரைச் சார்ந்து வாழ்வதே குழந்தைகளின் இயல்பு.

நாம் நமது சுயத்தைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்து விட்டு, மனம் மாறி குழந்தைகளைப் போல, இறைவனையே சரணடையும் நிலை வேண்டும் என்கிறார் இயேசு. அடித்தாலும் தாயின் முந்தானையைக் கட்டிக் கொண்டே அழும் குழந்தையைப் போல, தண்டித்தாலும் இறைவனின் பாதத்தையே பற்றிக் கொள்ளும் நிலை வேண்டும் என்கிறார். குழந்தைகளின்

இயல்புகளான கள்ளம் கபடமின்மை, பழி பகை உணர்ச்சியின்மை, கசப்பை மறக்கும் தன்மை என பட்டியலிடும் அனைத்துமே இறை மாட்சியை நாம் வெளிப்படுத்தத் தேவையானவை என்பதைப் புரிய வைக்கிறார்.

ஒரு சிறு பிள்ளையை அழைத்து அவர்கள் நடுவில் நிறுத்தி, இந்தச் சிறு பிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே பரலோகராஜ்யத்தில் மிகப் பெரியவர் (மத்தேயு 18 : 1-4) என்றார் இயேசு.

இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம்; கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத்தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள் (மத்தேயு 18 :10) என்கிறார் இயேசு.

சிறுவர்களுக்கான தேவதூதர்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள்! சிறுவரை பெருமைக்குரியவராகக் கருதுங்கள், காரணம் அவர்களே பரலோகராஜ்யம் நுழைவது எப்படி என்பதைத் தங்கள் வாழ்வின் மூலம் நமக்கு விளக்கிச் சொல்கின்றனர்.

சிறுபிள்ளை போல் ஏற்பது, இறைமாட்சியின் அடையாளம். பரலோகராஜ்யதை சிறுபிள்ளையைப்போல் ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் (லூக்கா 18:17) என்றார் இயேசு.

இயேசுவின் வாழ்க்கையில் சிறுவர்களை நலமாக்கி, சிறுவர்களின் பேய் விரட்டி, சிறுவர்களை ஆசீர்வதித்து, உயிர்ப்பித்து, போதித்து இரண்டறக் கலந்து வாழ்ந்ததை நாம் பார்க்கலாம். ஒருவகையில் இயேசுவே ஒரு குழந்தையாய்த் தான் இந்த பூமியில் வாழ்ந்தார். அதனால் தான், 'நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்' என பரிசுத்த வேதாகமம் இயேசுவை ஒரு பாலகனாக நமக்கு அறிமுகம் செய்கிறது.

சிறுவர்களின் வாயால் ஓசன்னா என புகழப்படுவதை தேவகுமாரன் இயேசுவின் எருசலேம் பயணம் நமக்கு படம்பிடித்துக் காட்டுகிறது.

சிறுவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் பொருட்களை உலக அளவீடுகளின்படி அளவிட்டு ஏற்பதில்லை, முழுமையாய் ஏற்றுக் கொள்கிறார்கள். இறையாட்சி என்பது கேள்விகளுக்கு உட்படுத்தப்பட்டு விடைபெறும் விஷயமல்ல, அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்படும் விசுவாசம் என்பதையே இயேசு நமக்குப் புரிய வைக்கிறார்.

இத்தகைய சிறுவர்களுக்கு மறைக் கல்வியை சிறுவயதிலிருந்தே போதிக்க வேண்டும் இன்றைக்கு நமது திருச்சபைகள் சிறுவர்களை முக்கியத்துவப்படுத்துகின்றன. சிறுவர் ஞாயிறு பள்ளிகள், மறைக்கல்விகள் போன்றவை அவர்களை களப்பணியாற்றவும் கற்றுக் கொடுக்கின்றன. சிறுவர்களின் பயணமும், பங்களிப்பும் தேவனுக்கு மாட்சியை அளித்துக் கொண்டே இருக்கின்றன.

சிறுவர்களை ஏற்றுக் கொள்வோம், அதன் மூலம் தேவகுமாரன் விரும்பிய மாட்சியை அவருக்கு அளிப்போம்.


10ஆம் பக்கத்தின் விடைகள்

## தேவனும் படைப்புகளும் - பதில்கள்

1. ஜலத்தின்மேல், 2. பூமி, 3. வெளிச்சம், 4. வானம், 5. ஆறாம் நாளில், 6. ஆதாம், 7. சுடர்கள், 8. ஏதேன் தோட்டம், 9. மண்ணினால், 10. ஆதாமின் விலா எலும்பினால்

# பாயும் புலி!

புலியின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.



# நற்குணம்

கிறிஸ்மஸ் என்றாலே பரிசுகள் வழங்கவேண்டுமென ஓடித் திரியும் போது, பரிசாய் வந்தவரை பல வேளைகளில் மறந்து விடுகிறோம். யாருக்கேனும் பரிசு கொடுக்க மறந்து விட்டால் தவித்து விடுகிறோம், யாரேனும் நமக்குப் பரிசு தராவிட்டால் கடுப்பாகி விடுகிறோம். இந்த கிறிஸ்மஸ் தினத்தில் கிறிஸ்மஸுக்குப் பரிசு என்பதல்ல, கிறிஸ்மஸே பரிசு என்பது தான் நாம் மனதில் இருத்த வேண்டிய முதல் சிந்தனை.

நானே வானிலிருந்து இறங்கி வந்த ஜீவ அப்பம் என்றார் இயேசு. நாம் பிரியாணி தேடும் அவசரத்தில் பிரியமானவரை பரிதவிக்க விட்டு விடுகிறோம். வாழ்வளிக்கும் உணவை விட்டு விட்டு வாய்க்கு சுவையளிக்கும் உணவின் பின்னால் அலைந்து திரிகிறோம். தமது உடலையே நமக்காய் தந்த இறைமகனை மறந்து விடுகிறோம்.

மூன்றாவதாக கிறிஸ்மஸ் நம்மை துரத்துவது ஆடை விஷயத்தில் தான். ஆடை வாங்குவதற்கான முன்னேற்பாடுகள் பல மாதங்களுக்கு முன்பே துவங்கி விடுவதும் உண்டு. சிலர் ஸ்பெஷலாக ஆடைகளை வடிவமைக்கவும் கொடுப்பார்கள். நண்பர்களென்றால் ஒரே மாதிரி ஆடை வேண்டும் என அடம்பிடிப்பார்கள்.



தொழுவத்தில் பிறந்த இயேசுவைப் போர்த்தியிருந்தது பழைய கந்தை துணி. மரியாளும், யோசேப்பும் பணக்காரர்களல்ல. அவர்கள் ஏழைகளின் பிரதிநிதிகள். அவர்களிடம் மழலை இயேசுவைப் போர்த்துவதற்குக் கூட ஒரு நல்ல துணி இருக்கவில்லை. கந்தை என்பது தமிழுக்காக எடுக்கப்பட்ட வார்த்தை தான். உண்மையில் அது வெட்டப்பட்ட துண்டு துணிகளை இணைத்து கயிறு போலக் கட்டி வைப்பது என்பது தான் எபிரேய விளக்கம். அதைக் கொண்டு தான் பாலகன் இயேசு போர்த்தப்பட்டார்.

ஒரு சின்ன பரிசுப் பொருளைக் கொடுக்க வேண்டுமென்றால் கூட நாம் அதன் மேல் அழகான அலங்கார ரிப்பனையோ, அட்டையையோ ஒட்டுகிறோம். சாதாரணப் பரிசுக்கே அத்தனையெனில், உலகின் உச்சபட்சமான பரிசுக்கு என்ன வழங்கப்பட்டிருக்க வேண்டும்? கந்தை! அது தான் தேவனின் தேர்வு.

தேவப் பார்வையில் எது விலைமதிப்பானது என்பதைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு தேவனைப் போன்ற சிந்தை வேண்டும். இந்த கிறிஸ்மஸ் நாளில் மனதில் கொள்ள வேண்டிய மூன்றாவது சிந்தனை, ஆடை என்பது தேவைக்கானது, அது மேன்மைக்கானதல்ல.

எந்த ஒரு பரிசும் முதலில் வெளிப்படுத்துவது அந்தப் பரிசை அளிப்பவர் நம்மீது வைத்திருக்கின்ற அன்பு தான். அதுவும் நினையாத நேரத்தில் அளிக்கப்படுகின்ற பரிசுகள் அதீத பிரியத்தைப் பிரதிபலிக்கின்றன. பரிசுகள் கட்டாயத்தினாலோ, கடமைக்காகவோ அளிக்கப்படுவது பரிசுகளையே அவமானப்படுத்துகின்ற செயல். இயேசு இந்த உலகிற்கு பரிசாக வந்தது, பிதாவாகிய தேவனின் ஆழமான அன்பைப் பிரதிபலிக்கிறது. அந்தத் பிதாவின் அன்பை அப்படியே பிரதிபலிக்கும் பரிசுப் பொருளாக இயேசுவின் வாழ்க்கை இருந்தது. நமது பரிசுகள் உண்மையான நம் அன்பைப் பிரதிபலிக்கிறதா?

பரிசைக் கொடுக்கலாம். எல்லோரும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. ‘‘உன் பரிசெல்லாம் எனக்கு வேண்டாம் என உதறிவிட்டுச் செல்லக்கூடிய ஏராளம் மக்கள் உண்டு’’. இயேசு எனும் பரிசையும் எத்தனையோ கோடி மக்கள் உதாசீனம் செய்து, நிராகரிக்கின்றனர். எனினும் பரிசுப் பொருள் திரும்பப் பெறப்படவில்லை. விரும்பும் போது எடுத்துக்கொள்ள வாய்ப்புகள் அளிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. நாம், தேவ குமாரன் இயேசு எனும் பரிசை உவகையோடு ஏற்றுக் கொள்கிறோமா?

கிறிஸ்மஸின் ஆகச்சிறந்த மகிழ்ச்சிக்குக் காரணம், நாம் அந்தப் பரிசுக்குத் தகுதியற்றவர்கள் என்பதே. வாழ்வில் நிராகரிக்கப்பட்ட ஒருவரை அரவணைத்து ‘இதோ உலகின் மிகப்பெரிய பரிசு’ என கொடுப்பது எவ்வளவு இனிமையானது. பட்டினியின் அகோரப்பிடியில் இருப்பவனுக்கு லாட்டரி அடிப்பதைப் போன்ற அனுபவம் அது. நாம் தகுதியற்றவர்களாய் இருந்தபோதே, நாம் பாவிகளாய் இருந்த போதே தேவ குமாரன் இயேசு எனும் மீட்பின் பரிசு நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பரிசை இதயத்தில் அமர வைக்க நம் மனதை சலவை செய்திருக்கிறோமா?

ஒருவருக்குப் பரிசு கொடுக்கவேண்டுமெனில் முதலில் அந்த நபருக்கு என்ன பிடிக்கும், என்ன பிடிக்காது? எது அவருக்குப் பயனுள்ளதாக இருக்கும், எது பயனளிக்காது? எது அவரிடம் இருக்கிறது, எது இருக்காது? போன்ற பல விஷயங்களை அலசி ஆராய்வோம். பரிசைப் பெறப் போகும் நபருக்கு மகிழ்ச்சியை அளிப்பதையே பரிசாகக் கொடுப்போம்.

பரிசுகளின் விஷயத்தில் நாம் பார்க்கின்ற இன்னொரு விஷயம், ‘‘இது கொஞ்ச நாளாச்சும் நல்லா இருக்குமா?’’ என்பது தான். மிகவும் மலிவான, விரைவிலேயே நாசமாகின்ற பொருட்களை நாம் பிரியமானவர்களுக்குக் கொடுப்பதில்லை. நல்ல தரமானதாக இருக்க வேண்டும் என்றே நினைப்போம். தேவன் தந்த பரிசு அந்தவகையில் எப்போதுமே அழியாதது. நிலைவாழ்வைத் தரக்கூடியது. நிலைவாழ்வைத் தருகின்ற வேறு எந்த பரிசும் நம்மிடம் இல்லை என்பதால் தான் இயேசு உன்னத பரிசாக மாறுகிறார். பரிசு நமக்கு நிலைவாழ்வைத் தரவிரும்புகிறது, நாம் அதை உணர்கிறோமா?

இந்த கிறிஸ்மஸ் நாளில் உலகிற்கு அளிக்கப்பட்ட மாபெரும் பரிசான தேவ குமாரன் இயேசுவை ஏற்றுக்கொள்வோம். அவரைப் பரிசாகத் தந்தவரின் அன்பை புரிந்து கொள்வோம். அந்தப் பரிசு நமக்குச் சொன்ன மனிதநேயப் பணிகளை தொடர்ந்து செய்வோம். அந்தப் பரிசின் நோக்கமான நிலைவாழ்வை சொந்தமாக்கிக் கொள்வோம்.

**அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள்.**

## “தேவன் உலகை சிருஷ்டித்தல்” தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக. (வாசிக்க: ஆதி. 1:1-2)

தேவன்
வெளிச்சம்
இருள்
சமுத்திரம்
பூமி
வானம்
சுடர்கள்



பகல்
இரவு
ஆதாம்
ஏவாள்
பறவைகள்
விலங்குகள்
வெட்டாந்தரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | வெ | ட் | டா | ந் | த | ரை | த | ஆ | பூ |
| தே | ந் | வா | ன | ம் | மு | இ | ர | வு | ரு |
| வ | ஏ | ங் | ரை | வி | ல | ங் | கு | க | ள் |
| ன் | வா | வெ | ளி | ச் | ச | ம் | ற | பூ | ஆ |
| ப | ள் | சு | ப | ற | வை | க | ள் | மி | தா |
| வா | ஏ | ட | ள் | ள் | இ | தே | ட் | ன | ம் |
| ர் | க | ர் | ச | மு | த் | தி | ர | ம் | த் |
| சு | கு | க | மி | ச | க | வெ | இ | ரு | ள் |
| இ | ளி | ள் | டா | ப | க | ல் | ர | ல் | தி |

# மாறு உருமாறு

ஒருவர் பிறந்து சில ஆண்டுகள் கடந்தாலே பாலன் எனும் அடைமொழியை நாம் விலக்கி விடுவது இயல்பு. ஆனால், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு பிறந்த ஒருவரை இன்னும் நாம் ''பாலன்'' என்று அழைக்கிறோம். குழந்தை இயேசு என கொஞ்சுகிறோம். புல்லணையின் பாலனே என பாடுகிறோம். குடிலில் உதித்த குழந்தையே என்கிறோம். மானுடனாய் வந்த மழலையே என வியக்கிறோம். அது தான் கிறிஸ்மஸின் இருப்பு.

எத்தனையோ தத்துவ ஞானிகள் மழலையராய் பிறந்து, மானிடராய் வளர்ந்து விட்டனர். இயேசு இன்னும் அந்த மழலை அடையாளத்துடன் கிறிஸ்மஸ் தினத்தில் நம்மோடு உறவாடுகிறார்.

''நீங்கள் சிறு பிள்ளையைப் போல மாறாவிடில் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது'' என்றார் இயேசு. மழலைகளின் மனதைப் பெறாமல் சுவர்க்க வாழ்க்கை என்பது சாத்தியமில்லை என்பது தான் மழலை இயேசு நமக்கு நினைவூட்டுகின்ற முக்கியமான செய்தி.

''குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்க வேண்டாம்'' என ஒருமுறை சீடர்களிடம் கண்டிப்பாய்ச் சொன்னார். சிறுவர்களோடு விளையாடுவதால் இயேசுவின் நேரம் வீணாகும் என சீடர்கள் நினைத்தார்கள். சிறுவர்களோடு உறவாடுவது முக்கியமற்றது என அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இயேசுவோ, சிறுவர்களை அரவணைத்தார். அவர்களோடு அளவளாவுவதே ஆனந்தம் என்றார்.

''என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது'' என்கிறார் இயேசு. சிறுவர்களை தவறான வழியில் நடத்துவதை விட செத்துப் போவது நல்லது என்பது தான் அதன் எளிமையான அர்த்தம். அத்தகைய மனிதர்கள் வாழவே தகுதியற்றவர்கள் என்கிறது இயேசுவின் வார்த்தை.



''சிறு பிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்'' எனும் அவரது வார்த்தை சிறுவர்களை ஏற்றுக் கொள்வதன் தேவையை விளக்குகிறது.

அவர்களை இறைவனின் வழியில் நடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைப் புரிய வைக்கிறது.

குழந்தைகள் எந்த வழியில் வேண்டுமானாலும் நடப்பார்கள், அவர்களை வழிநடத்துபவர்களின் கரங்களில் அது இருக்கிறது. அவர்கள் களிமண் போன்றவர்கள். எப்படி அவர்கள் உருவாகிறார்கள் என்பது குயவனின் கைகளில் தான் இருக்கிறது. அவர்கள் எப்படி வார்க்கப்படுகிறார்கள் என்பது குயவனின் இதயத்தில் இருக்கிறது. குழந்தைகள் தங்களை குயவர்களிடம் ஒப்படைக்கிறார்கள். குழந்தைகள் தங்களை ஆசிரியர்களிடம் ஒப்படைக்கிறார்கள். குழந்தைகள் தங்களை பெற்றோரிடம் ஒப்படைக்கிறார்கள். காரணம், அவர்களிடம் தங்களை முழுமையாய் ஒப்படைக்கும் தாழ்மை இருக்கிறது.

''சிறு பிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே பரலோகத்தில் மிகப் பெரியவர்'' என்றார் இயேசு. பெரியவர் என்பவர் அனுபவத்தை அதிகம் சேர்த்தவர் அல்ல. பெரியவர் என்பவர் அறிவை மூட்டை மூட்டையாய் தூக்கிச் சுமப்பவரல்ல. பெரியவர் என்பவர் வயதின் நரையை முதுமையின் முகவுரையோடு சுமந்து திரிபவரும் அல்ல. அவையெல்லாம் மண்ணுலக அடையாளங்கள். அவையெல்லாம் மண்ணுலக ஒப்பீடுகள். ஆனால் விண்ணுலகில் பெரியவராக வேண்டுமெனில் அதற்குரிய தகுதி ஒன்றே ஒன்று தான். தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். அதுவும் ஒரு சிறு பிள்ளையைப் போல தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்.

''இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம்; கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள்'' என்கிறார் இயேசு. குழந்தைகளுக்கு எதிராக நாம் செயல்படும் போது அவர்களுடைய வானதூதர்கள் கடவுளிடம் அவர்களுக்காய் பரிந்து பேசுகிறார்கள். அவர்களுடைய பரிந்து பேசுதல் குழந்தைகளை இழிவாய் நடத்துவோருக்கு, அழிவைக் கொண்டு வரும் என்பது சர்வ நிச்சயம்.

சிறுவர்கள் இந்த உலகில் முக்கியத்துவமற்றவர்களாக இருக்கலாம். ஆனால், இறைவன் பார்வையில் அவர்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் கூட வழி விலகிச் செல்லக் கூடாது எனும் ஆசை இயேசுவிடமும், அவரை அனுப்பிய பரலோகத் தந்தையிடமும் இருக்கிறது.

''இச்சிறியோருள் ஒருவர்கூட நெறி தவறிப் போகக்கூடாது என்பதே உங்கள் பரலோகத் தந்தையின் திருவுளம்'' என்கிறார் இயேசு.

இப்படி, இயேசு பாலனாய் பிறந்து இத்தனை நூற்றாண்டுகள் தாண்டியும் ஏன் அவரைப் பாலனாகவே பார்க்கிறோம் என்பதன் விடை அவருடைய சிந்தனைகளின் வழியாகவே நமக்கு விளங்குகிறது. கிறிஸ்மஸ் நமக்குச் சொல்வது அழகிய நட்சத்திரங்களைக் கட்டுவதோ, வண்ணக் குடில்கள் அமைப்பதோ, உயரமான கிறிஸ்மஸ் மரங்கள் நாட்டுவதோ அல்ல. குழந்தைகளைப் போல மாறுங்கள் என்பதே.

பாலன் இயேசுவின் பிறப்பு, வாழ்வின் சிறப்பாக மாற வேண்டுமெனில், நாம் பாலர்களாக மாறவேண்டும். நம் இதயத்திலிருந்து தீய சிந்தனைகளை அறுத்தெறிய வேண்டும். பாலகர்களின் குணமான கள்ளம் கபடமின்மை, தாழ்மை, மனித நேயம், அன்பு, மன்னித்து மறக்கும் குணம் போன்றவற்றை இதயத்துக்குள் நிரப்ப வேண்டும். அதுவே உண்மையான கிறிஸ்மஸ்.

இயேசு பாலனாய் பிறந்து விட்டார், நாம் எப்போது மாறுவோம்! எப்போது உருமாறுவோம்?

# மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் (இயேசு)

உயிர் மூச்சு ! பிராண வாயு ! ஜீவ சுவாசம் !

இதைப்பற்றியெல்லாம் எப்போதாவது நினைத்திருப்போமா என்றே தெரியவில்லை. காலம் நம்மை கண நேரமும் அதைப்பற்றி மட்டுமே நினைக்கக்கூடிய இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. வளி மண்டலத்தில் தேவன் இலவசமாய் நிரப்பி வைத்த பிராண வாயுவின் தட்டுப்பாடு இன்றைக்கு நிறைய பேருடைய பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிறது.

நாமெல்லாம் எப்போதும் யோசிக்காத காற்றின் தேவை இப்போது நம் முன்னால் விஸ்வரூபமெடுத்து ஆடுகிறது. மரங்களை முறிக்காதீர்கள், காற்றில் உயிர்வளி குறையும் என்றபோதெல்லாம் நாம் கவலைப்படவில்லை. காற்றை மாசுபடுத்தாதீர்கள் நுரையீரல் நலிவடையும் என்றபோதெல்லாம் நாம் பொருட்படுத்தவில்லை. உயிர்வளியின் தேவை என்ன என்பதை கோவிட் வந்து நமது குரல்வளையை நெரித்து கற்றுத் தந்திருக்கிறது.

சராசரி மனிதர் நாளொன்றுக்கு 11 ஆயிரம் லிட்டர் ஆக்சிஜனை சுவாசிக்கிறார் என்கிறது புள்ளி விவரக் கணக்கு. அதை இன்றைய சந்தைக்கணக்குடன் ஒப்பிடும்போது பல இலட்சம் ரூபாய் வருகிறது. ஆண்டுக்கு பல நூறு கோடி ரூபாய்கள் என்கிறது. ஆயுளுக்கு பல்லாயிரம் கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஆக்சிஜனை நாம் சுவாசிக்கிறோம் என்பதுதான் கூட்டல் கழித்தல் கணக்கு சொல்லும் செய்தி. ஆனால், எல்லாவற்றையுமே தேவன் நமக்காய் உருவாக்கித் தந்திருக்கிறார், இலவசமாகத் தந்திருக்கிறார் என்பது தான் நாம் உணர வேண்டிய செய்தி.

ஜீவ சுவாசம்! தேவன் நமக்குத் தந்த கொடை! அது தான் மண்ணையும், மனிதனையும் ஒன்றாக்கியது. தேவன் தனது ஜீவ சுவாசத்தை நமக்கு அளித்தது, ‘நான் தேவன்’ என நம்மை மேன்மைப்படுத்தித் திரிய அல்ல. நாம் தேவனால் வாழ்வைப் பெற்றோம் என பணிவு காட்டித் திரிய. தேவன் தனது குளோனிங்களை உருவாக்கவில்லை. குயவன் பாண்டம் செய்வது போல நம்மை வனைந்திருக்கிறார். தனது சுவாசத்தை நமக்கு கொடையாய் அளித்திருக்கிறார். அவர் மனிதனுக்கு அளித்த மிகப்பெரிய கொடை ஜீவ சுவாசம். தரப்போகிற மிகப்பெரிய கொடை மீட்பு.

நாம் எப்போதுமே தேவனாய் மாற முடியாது. ஆனால் தேவனின் இயல்புகளை நம்மில் வளர்த்துக் கொள்ள முடியும். காரணம் நம்மைப் படைத்தவரும், நமக்குள் உயிரை அடைத்தவரும் தேவனே. நம்முடைய மூச்சாக இருக்க வேண்டியது பணிவு.

நமது வாழ்க்கையும், நமது சுவாசமும் சுயநல நுரையீரல்களில் சுற்றி வருவதற்கானவை அல்ல. அவை பிறர்நலப் பணிகளில் நம்மை அழைத்துச் செல்வதற்கானவை. நாம் நம்மை அழித்து பிறரை வாழ வைக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார். அதனால் தான் சகோதரருக்காக உயிரைக் கொடுப்பதே மேலான அன்பு என அவர் பறைசாற்றுகிறார். நாமோ பிறரை அழித்து நம்மை வாழ வைக்கிறோம். அப்படிச் செய்யும் போது நமக்குள் இருக்கின்ற தெய்வீக மூச்சு, துருப்பிடிக்கிறது. பரமனின் மூச்சு சுயநல மூச்சல்ல, பொதுநல மூச்சு.

ஜீவ மூச்சு, மாற்றத்தின் மூச்சு. புழுதியின் துகள்களிலிருந்து, புகழின் தளத்துக்கு இடம் பெயரும் மாற்றம். இருளின் ஆட்சியிலிருந்து ஒளியின் சாட்சிக்கு இடம் பெயரும் மாற்றம். வெறுமையின் தரையிலிருந்து, முழுமையின் இறையை நோக்கி இடம் பெயரும் மாற்றம். பாதாளத்தின் ஆழத்திலிருந்து விண்ணகத்தின் மேடைகளுக்கு இடம் பெயரும் மாற்றம். இல்லாமையின் கரையிலிருந்து, சர்வத்தின் அருகினுக்கு செல்லும் மாற்றம். தற்காலிக வாழ்விலிருந்து, நிரந்தர மீட்புக்கு இடம் பெயரும் மாற்றம். இது மாற்றத்தின் மூச்சு, ஏற்றத்தின் மூச்சு.

இயேசு கொடுத்த வாழ்வானது புதிய மாற்றத்துக்கு நம்மை அழைத்துச் செல்ல வேண்டும். அது வெறும் பரலோக வாழ்வை நோக்கிய நகர்வல்ல. மண்ணில், நாம் சார்ந்த சமூகத்தின் மாற்றங்களுக்காகவும் பணியாற்ற வேண்டும். என் அயலான் யார் எனும் கேள்விக்கு விடை விண்ணில் இல்லை. மண்ணில் தான் இருக்கிறது. நான் அன்பு செய்ய வேண்டிய சக மனிதன் விண்ணில் இல்லை, மண்ணில் தான் இருக்கிறான். மாற்றத்தின் மூச்சு, நமது சமூகத்தில் பிராண வாயு தேவைப்படும் விஷயங்களில் வீசட்டும்.

முதலில் தேவன் ஊதினார்! மூச்சுக் காற்று முதல் மனிதனுக்கு ஜீவன் கொடுத்தது. தேவனின் வார்த்தை தொடர்ந்து வரும் அத்தனை தலைமுறைக்கும் ஜீவன் கொடுக்கிறது. இயேசு வார்த்தையாகவே வந்த ஜீவ மூச்சு. தேவன் ஊதிய மூச்சுக்காற்றின் தொடர்ச்சி தான் உயிரூட்டும் வார்த்தைகள். அவை தான் வாழ்வு தரும் வார்த்தைகள். இன்றைக்கு இயேசுவின் மூச்சு என்பது தேவ வார்த்தைகளே, அவையே நமது வாழ்வின் சுருக்கங்களைச் சமன் செய்கின்றன. நமது மனதின் அழுக்குகளை சலவை செய்கின்றன.

உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்கும் போது, இயேசுவின் மூச்சை நாம் பிறருக்கும் கொடுக்கிறோம்.

ஜீவ மூச்சு தான் விலங்குகளையும் மனிதர்களையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. ஜீவ மூச்சு தான் மனிதனை தேவனோடு இறுக்கக் கட்டுகிறது. ஆதாமுக்கு மட்டுமல்ல, பிறக்கும் அத்தனை உயிர்களுக்கும் தேவனின் மூச்சே துவக்க மூச்சாய் தரப்படுகிறது. விலங்குகளுக்கு தேவன் ஜீவ மூச்சை ஊதவில்லை, எனவே அவை ஐந்து அறிவோடு சுருங்கிவிட்டன. அவை தேவனை அறியும் அறிவில் வளரவில்லை. மனிதனுக்கு தேவன் ஜீவ மூச்சை அளித்தார். எனவே அவனது ஜீவன் தேவனின் ஜீவனோடு முடிச்சிட்டுக் கொண்டது. அந்த முடிச்சை அவிழ்க்காமல் தொடரும் மனிதன் தேவனின் வழியில் நடக்கிறான். பிரித்து விட்டுப் பிரிந்து நடப்பவன் சுயமாய் நடந்து அழிகிறான்.

தேவனின் மூச்சுக்காற்று நமது இதயத்தின் கரம்பிடித்து நம்மை தூய்மையின் பாதைகளில் அழைத்துச் செல்கிறது. தேவனின் மூச்சுக்காற்று நமது வழிகளில் நாம் எடுக்க வேண்டிய முடிவுகளை நமக்கு உணர்த்துகிறது.

தேவனின் மூச்சுக்காற்று உலவும் உடலை தூய்மையாய்க் காப்போம். தேவனின் மூச்சுக்காற்று உலவும் நமது இதயத்தை புனிதமாய் காலத்தால் கறைபடியாமல், தேவனில் நிறைவடைவதாய் இருக்கட்டும்.

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்:
நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே
அற்புதங்களைச் செய்வார். யோசுவா 3:5



ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
நடத்தும்

# 40 நாள் ஆசீர்வாத சுத்திகரிப்பு ஜெபம்

## 2025ஐ சந்திக்க ஆயத்தப்படுவோம்

நவம்பர் 18-ந் தேதி திங்கட்கிழமை
முதல் டிசம்பர் 30-ந் தேதி
திங்கட்கிழமை வரை
தினமும் மாலை 6:30 - 8:30 வரை



இதில் குடும்பமாய் கலந்துகொண்டு
தேவ ஆசீர்வாதத்தைபெற்றுகொள்ளும்படி
அன்புடன் கேட்டுகொள்ளுகிறோம்.

PASTOR.
OSBORNE
JEBADURAI

ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்
50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம் சென்னை-600024.
+919003067777.+919884908777.+919884916777




If undelivered please return to:

**Elim Glorious Revival Church**

#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India

for 24X7 Prayer: 91-9444322200, 9444322211

Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com